International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சு. சமுத்திரம் நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்

**அ. ராமதாஸ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் ப. கோடித்துறை**
உதவிப் பேராசிரியர், நெறியாளர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

**ஆய்வுச் சுருக்கம்**

'பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்வதும்' என்று கூறிய பாரதியின் சிந்தனைக்கு ஏற்றவகையில் பெண்ணியச் சிந்தனைகள் பற்றி சு. சமுத்திரம் அவர்கள் தன்னுடைய புதினங்களில் ஆணுக்கு பெண்கள் நிகறாக உரிமைக் கோருதல், சுய மரியாதையுடன் வாழக் கற்றுக்கொள்ளுதல், அடிமைத்தனத்தில் இருந்து விலகுதல், முரண்பாடான கருத்துக்களுக்கு எதிர்த்து குரல்கொடுத்து சுயமரியாதையை பெற்றுத் தருதல், குடும்பப் போராட்டங்களில் இருந்து விலகி சமூக மனப்பான்மையுடன் வாழக்கற்றுக்கொள்ளுதல், புதிய சிந்தனைகள் செயல்பாடுகளைச் சமுதாயத்திற்குப் புரியவைத்தல், மனித நேயத்தினை மக்களுக்கும் உறவுகளுக்கும் எடுத்துக்காட்டுதல், இன்றைய போட்டி மிகுந்த உலகில் சுயமாக வாழக்கற்றுக் கொள்ளுதல், பெண்களை நாட்டின் வளர்ச்சிக்கும் குடும்ப வளர்ச்சிக்கும் பெண்களின் பங்களிப்பு எனப் பல்வேறு கோணங்களில் பெண்ணியச் சிந்தனைகள் சு.சமுத்திரம் தன் படைப்புகளின் வழியாக எடுத்துக்காட்டியுள்ளார். அவ்வகையில் பெண்களின் பங்களிப்பு சார்ந்த சமூக சேவை, புரட்சிபெண், ஒடுக்கப்பட்ட பெண், உறவுகளால் ஏமாற்றப்பட்டவள், தாய் மகன் பாசப் போராட்டம், கைம்பெண், பாலியல் செயல்கள் என்ற தலைப்புகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகின்றன. இத்தலைப்புகள் மூலம் சமுதாயத்தில் பெண்களின் சிந்தனைகளை சு.சமுத்திரம் அனுகிய போக்கினை அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகக் கருதப்படுகின்றன.

## முன்னுரை

சமுதாயக் கட்டமைப்பில் ஒவ்வொரு பெண்களும் தன் வாழ்க்கயில் பல்வேறுபட்ட இன்னல்களையும் துன்பங்களையும் அடைகின்றாள். தனக்கென்ற கொள்கை, கோட்பாடு, வாழ்க்கை நெறிமுறைகளை அமைத்துக்கொள்வது மிகவும் கடினமான ஒன்றாகக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு பெண்களும் தன் வாழ்க்கையில் மற்றவர்களின் கட்டுப்பாட்டில் வாழவேண்டிய சூழல் உருவாகின்றன. அவ்வகையில் சு. சமுத்திரம் புதினங்கலில் பெண்களின் துயரங்கள், எதிர்கால வாழ்க்கையைக் கற்றுக்கொடுக்கும் புரட்சிப்பெண்கள், வாழ்க்கைத் தத்துவத்தினை எடுத்துக்கூறும் பெண்கள், பெண் சிந்தனைகள் என ஒரு சில பகுதிகளை இக்கட்டுரையின் மூலம் காணலாம்.

**சமூக சேவை**

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு எதிர்காலத்தைப் புரியவைக்கவும் தன்னம்பிக்கையினை கொடுக்கும் வகையில் புரியவைத்தல் ஹெச்.ஐ.வி கிருமியால் பாதிக்கப்பட்ட கலைவாணி தான் பட்ட துன்பங்களை வேறு எவரும்படகூடாது எனக் கருதி 'எய்ட்ஸ் திருமண தடுப்பு இயக்கம்' என்ற இயக்கத் தினை உருவாக்குகின்றாள். சமுதாயத்தில் ஒவ்வொருவரும் விழிப்புடன் வாழவேண்டும் எனவும் மருத்துவத்துறையில் உள்ள பிரச்சனைகளைத் தெரிந்துகொள்ளவும் கலை வாணி என்ற பாத்திரத்தின் மூலம் எய்ட்ஸ் நோயின் விழிப்புணர்வினைப் 'பாலைப் புறா' நாவல் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

*இந்த விழிப்புணர்வு அமைப்பு ஒரு வித்தியாசமான அமைப்பு எய்ட்ஸ் திருமணத்தைத் தடுப்பதே இதன் பிரதான நோக்கம். இதனாலேயே இதற்குப் பல திசைகளில் இருந்தும் எதிரிகள் முளைப்பார் கள். நாம் அடிபட வேண்டியது வரும் பிடிபடவேண்டியதும் வரும். ஆனாலும் நமது நோக்கம் நல்லதாக இருப்பதால், நல்லதே நடக்கும்... என்றாலும், நாம் குதிக்கிறதுக்கு முன்னால குனிந்து பார்க்கனும்*

(பாலைப்புறா. ப.305)

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சேவை செய்யும் உயரிய பண்புநலன் கொண்டவளாகக் கலைவாணி என்ற பாத்திரத்தினைப் படைத்துள்ளார்.

சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டவர்களாகவும் கணவன் மனைவிகளையும், பிள்ளைகள் பெற்றோர்களையும் மிகவும் கேவலமான முறையில் வெறுத்து ஒதுக்குகின்றன. அவர் களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் அவர் களுக்கு மனிதாபமானத்தின் நிலையினை புரிய வைக்கவும் 'மறுவாழ்வு இல்லம்' ஒன்றினை ஆரம்பிக்கப்படுகின்றன. அங்கே உடலாலும் மனதாலும் பாதிக்கப் பட்டவர் களுக்குத் தேவையான மருந்துகளும், மனச் சுமையினைக் குறைக்க கருணையும், அன்பும், அரவணைப்பும் அளிக்கப்படுகின் றன. தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்த காலத்தில் இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் நமக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் தன் குடும்பத்தை சேர்ந்தவர் களே வெறுத்து ஒதுக்கவும், வீட்டை விட்டு வெளியேற்றவும் செய்கின்றனர். அந்த அப்பாவி பெண்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் இடமாகவும் மணிமேகலை என்ற பாத்திரத்தினால் தொடங்கப்பட்ட மறுவாழ்வு இல்லம் பற்றி "இல்லம் தோறும் இதயங்கள்" என்ற நாவல் மூலம் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'ஆயிரம் ஆராய்ச்சிகளை விட அதில் கிடைக்கும் பட்டங்களை விட ஒரு அபலைக் காவது ஆதரவளிப்பது தனக்கே ஒரு காலத்தில் தற்காப்பாக மாறும்' என்றார். தர்மம் என்பதே ஒரு தற்காப்பு தானே! அதோடு எளியவர்களை ஆராய்ந்து அவர் களை வைத்துப் பட்டம் பெற்று அவர் களுக்காக எதுவும் உதவவில்லை. அதனால் அது எழுத்தாளனாக இருந்தாலும்சரி ஆராய்ச்சி மேதையாக இருந்தாலும்சரி அதுவே அவர்களுக்கு ஒரு தற்கொலை தர்மமாகும் என்றார்.

*"சிந்தனையில் மூழ்கிப்போய் தமிழகத்தைச் சுற்றிப் பார்த்த இந்த மாது தேவதாசிகளை விட தொழுநோயாளிகள் மிகக் கேவலமாக நடத்தப்படுவதைக் கண் நோகக் கண்டார். தேவதாசிகள் வாழ்கிறபடி வாழ விரும்பாத தால் துரத்தப்பட்டார்கள். ஆனால் இவர்களோ வாழ்கிறபடி வாழ விரும்பி னாலும் வாழாதே என்பது போல் துரத்தப்பட்டவர்கள் கணவன் மனைவியாலும், மனைவி கணவனாலும், பிள்ளைகள் பெற்றோராலும் பெற்றோர்கள் பிள்ளைகளாலும் துரத்தப்பட்டவர்கள்.*

*அன்று அவர்களுக்குக் கட்டப்பட்ட இந்த இல்லத்திற்கு இப்போது நினைவுச் சின்ன மாக இருக்கவேண்டிய இந்த மனிதாபி மானக் கட்டிடத்திற்கு இன்னும் வேலை யிருப்பது மனிதாபிமானத்திற்கே ஒரு சாட்சியாகவும் அதே சமயம் ஒரு சாவு மணியாகவும் தோன்றியது*

(இல்லந்தோறும் இதயங்கள் பக்.200, 201)

**புரட்சிப் பெண்**

ஒரு சமூகத்தில் பிறந்து உறவுகளோடு வளர்ந்து பொருளாதார ஏற்றத்தாழ்வினால்

வெறுத்து ஒதுக்கப்படும் அவல நிலை உலகம்மை மற்றும் அவளுடைய தந்தை மாயாண்டி ஆகும். தந்தை பெற்ற கடனை அடைக்க காலம் முழுவதும் வீட்டு வேலைக் காரியாகவும், தந்தை கொத்தடிமையாகவும் நடத்தப்படுகின்றன. இதனால் தந்தை காவல் நிலையத்தில் அடைக்கபடுகின்றார். குடும்பத்தை வீட்டுச்சிறையில் அடைப்பதைப் போல் நடத்தப்படுகின்றார். இதனால் பொங்கி எழுந்த உலகம்மை தனக்கு ஆதரவும் அனுதாபமும் அளிக்கும் ஹரிஜனங்களே மேன்மையானவர்களாகவும் தனக்கு பாதுகாப்பு அளிக்கும் சகோதரத் தன்மை உடைவர்களாகவும் கருதி ஹரிஜன மக்களுடன் சேர்ந்து தனது தந்தைக்கு இறுதிச்சடங்கினை அறங்கேற்றும் காட்சியாக நாவல் ஆசிரியர் 'ஒரு கோட்டுக்கு வெளியே…' என்ற புதினம் மூலம் காட்டியுள்ளார்.

*"ஒன்னப் பார்த்ததும் என் உடன்பிறவாச் சகோதரியா நினைச்சவன் நான்! என்னைக்கு அய்யாவுக்கு கொள்ளி போட்டேனோ அன்னைக்கே நீ என் உடன்பிறந்த சகோதரி யாயிட்டே. நீ எடுத்த முடிவும் நியாயந்தான் தங்கச்சி! ஒனக்கு ஒரு தொல்லையும் வராம பார்துக்கிடவேண்டியது பொறுப்பு என்னோட யது! நிஜமாவே நீ இங்க வந்து தாழ்ந்த ஜாதியாகி, தாழ்ந்த ஜாதிய மேல் ஜாதியாக் கிட்ட! இந்த நாட்ல ஹரிஜனங்களை மேல் ஜாதியாக்குறது இந்த ஜென்மத்துல நடக்காது. ஆனால் மேல்ஜாதி ஏழை எளியவர்களை, ஹரிஜனங்களாய் மாத்துறது லேசு. பிரபுத்துவ மனப்பான்மை யில் தங்களோட நியாயமான நிலையைப் புரிஞ்சுக்காத மேல்ஜாதி ஏழை பாளைங்களை கீழ்ஜாதி ஹரிஜனங்களாய் நடத்தனும். ராமானுஜர் ஹரிஜனங்கள ஐயங்கார்களா மாத்துனதா ஐதீகம். அவரு வைணவத்துக்காக மாத்துனாரு. நாம பாட்டாளி வர்க்கத்துக்காக தலைகீழாய் மாத்தணும். நாட்ல நிலவுற வகுப்புகள வர்க்கப் படுத்தணும். மேல் ஜாதி ஏழையும், கீழ் ஜாதி ஹரிஜனங்களும் ஒரே வர்க்கமாய் போற காலம் வரத்தான் போவுது. அதே முறையில் பார்த்தால் நீ சேரியிலே சேரப் போற ஒரு சமதர்மப் புரட்சிக்கு ஒரு காரணமாய் அமைலாம். இந்த வகையில் இந்த ஊர்ல ஒரு புரட்சி ஏற்படுறதுக்கு ஒரு தாயாய் மாறிட்ட, உண்மையிலேயே நீ… என் தாயை விட… என் தாயைவிட…"* (ஒரு கோட்டுக்கு வெளியே. பக்.191, 192)

எந்த ஒரு தவறும் செய்யாமல் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகும் கலாவதி உடலில் ஒன்பது வாசல்களில் நெருப்புத் தடயங்கள் சுய நினைவற்ற நிலையில் வாழும் நிலை, இவற்றை அரங்கேற்றிய வன்கொடுமையாளர்களுக்குத் தண்டனை வழங்காமல் அப்பாவிப் பெண்ணிற்கு அநீதி களை விளைவிக்கும் கொடுமைக்காரர்கள் தண்டனையில் இருந்து தப்பித்து சுதந்திரமாய் வாழும் மனிதர்களிடம் நியாயம் கேட்டுப் போராடும் புரட்சிப்பெண் கல்லூரிப் பேராசிரியர் தமிழரசி காவல் நிலையத்தின் முன்பாக இறந்த சடலத்தைப் போட்டு நியாயம் கேட்கும் புரட்சிப் பெண்ணாக ஆசிரியர் "நெருப்புத் தடையங்கள்" நாவல் மூலம் சுட்டிக்காட்டுகிறார்.

*"சுடுங்கடா! என்னோடு சேர்த்து எத்தனை பேரை வேண்டுமானாலும் சுடுங்கடா! சுட்டுத் தொலைங்கடா! தன்மானத்தை விட்டுத் கொடுத்து, நாங்க சுதந்திரத்தை அனுபவிக்கத் தயாராய் இல்லை. உம்… சுடுங்கடா! காலம் ஒங்களைச் சுடுமுன்னால் எங்களைக் காலனிடம் அனுப்பங்கடா!* (நெருப்புத்தடை யங்கள், ப.293)

தனது கோபத்தினையும் நியாயத்தினையும் ஒன்று சேர காவல் நிலையம் முன்பாகத் தன் உரிமைக்குரலில் வாதிடுகின்றாள்.

**ஒடுக்கப்பட்ட பெண்**

கணவனை இழந்த பெண்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும், கல்விக்காகவும் வேலைக்கு செல்லவேண்டியுள்ளது. இவற்றினை தனக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டு தன்னுடைய அதிகாரம், ஆளுமையினால் அப்பெண்களை இழிவுபடுத்தவும் தன்னுடைய இச்சைக்குப் பலியாக்குகின்றனர். இளம்வயதில் கணவனை இழந்த வாணி அலுவலகத்திற்குச் செல்கிறாள். அங்கு மானேஜரால்பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகின்றாள். இதனை வெளியில் சொல்ல முடியாமல் வேதனைப்படுகின்றாள்.

இச்செயலைத் தட்டிக்கேட்கும் மெய்யப்பன் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகின்றார்.

*வாணியக்கா... எப்படி வாழ்ந்தவள்னு ஒங்களுக்குத் தெரியும்... இன்னும் சொல்லப் போனால் இது, வாணியக்கா வோட பிரச்சனை இல்லை... ஒரு பெண்ணோட பிரச்சனை இன்றைய பொருளாதாரச் சுமையில... படித்த பெண் வேலைக்குப் போக வேண்டியதாய் இருக்கு... வீட்ல புருஷன் திட்டுறதக்கூட பொறுக்க முடியாமல் எதிர்த்துப் பேசுற பெண்கூட, அலுவலகத்தில அதிகாரி திட்டுரதையும் சகிக்கிறார் என்றார், அவளுக்குமான பிரச்சனையோடு, வயிற்றுப் பிரச்சனையும் இருக்கறது தான் காரணம்... வயிற்றுக்காக, வாயையும் காதையும் மூடுற பெண்களை,அதிகாரத்தைவைத்துச்சூறையாட நிலைக்கலாமா... இப்போ உங்களை உதைக்கிறதுக்கு எவ்வளவு நேரமாகும்?*

(வெளிச்சத்தை நோக்கி, பக்.42, 43)

இவ்வாறு அலுவகத்தில் நடக்கும் இடர்பாடு களையும் பாலியல் பிரச்சனைகளையும் வெளிச்சத்தை நோக்கி... புதினம் மூலமாக ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏழ்மையான குடும்பத்தில் மூத்த மகளாக பிறந்து உறவினர் வீட்டில் மல்லிகா வளர்க்கப்படுகிறாள். உறவினர் வீட்டில் அவளை கட்டாயப்படுத்தி மிகவும் மோசமான குடிகாரன் ராமன் என்பவனுக்குத் திருமணம் செய்து வைக்க கட்டளையிடப்படுகின்றன. ஆனால் அவள் மனம் அவற்றை விரும்பவில்லை. இவற்றை எதிர்த்துக் கேள்வி கேட்கும்போது வளர்ப்புத் தாய் தன்னுடைய அதிகாரத்தினையும் ஆனவப்போக்கினையும் வளர்ப்பு மகள் மீது கடுமையான வார்த்தை களால் பேசுகின்றாள்.

*எதிர்த்துப்பேசுகிற அளவுக்கு வந்திட்டியா? எதிர்த்தாப் பேசுறே? இந்த வீட்டுல இருக்கணு முன்னா ராமனைக் கட்டியாகனும், இல்லைன்னா... மரியாதையாய் உன் அப்பன் வீட்டைப் பார்த்துப் போ...* (வளர்ப்பு மகள். ப.78)

தன்னுடைய சுயநலத்திற்காகக் கட்டாயத் திருமணம் செய்து வைக்கத் துடிக்கும் ஆணவப்போக்கினை 'வளர்ப்பு மகள்' புதினம் மூலம் ஆசிரியர் சுட்டிக்காட்டிள்ளார்.

பெண்களை போதைப் பொருளாகவும் கணவனின் அடிமையாக வாழ வேண்டிய கட்டாயத்தில் தன்னுடைய சுதந்திரமான எண்ணங்களை வெளியே சொல்ல முடியாமல் பெற்றோர்களுக்கும், உடன் பிறந்தோர்களுக்கும் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கவும் தயாராக உள்ளனர். இருபது வயது பெண்ணை அறுபது வயது கிழவனுக்குத் திருமணம் செய்யத்துடிக்கும் உறவுகள். பொருளாதாரத்தில் உச்சம் கண்டவர்கள் எதைச் செய்தாலும் ஏற்றுக் கொள்ளும் கட்டாயத்தில் பெண்களின் மனநிலை தள்ளப்படுகின்றன.

*நடக்குமா... நடக்குமா?... என்று தான் சுந்தரி நினைத்தாளே தவிர, 'நடக்கவிடாமல் தடுப்போம்' என்று நினைத்து வெளியே வந்து தாம்பாளத் தட்டை எட்டி உதைக்க முடியவில்லை. பாழும் மௌனம் அவளைப் போல் பலரைப் பாழ்படுத்திய குடும்ப கௌரவம் - அவளை உறைய வைத்தனவே தவிர, உருப்படியாக எதையும் செய்யவிட வில்லை. இல்லையென்றால் மயினிக்காரி உள்ளே வந்து, 'ஒண்ணுக்கும் லாயக்கில்லாத வாத்தியான் பய இனிக்குது, ஒரு லட்சம் ரூபாய் சொத்தோட இருகிற பெரியண்ணாச்சி கசக்கு தாக்கும்?' என்று சொன்ன போது இவள் குப்புறப்படுத்து அழுதாளே தவிர, சொன்னவள் வாயைக் கிழிக்கவில்லை*

(சோற்றுப்பட்டாளம், ப.112).

பெண்களை அடிமைகளாக நடத்தப்பட்ட காட்சியினைச் சோற்றுப்பட்டாளம் புதினம் மூலம் ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

கணவனை இழந்த பெண், தன்னுடைய பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும், சமுதாயத்திலும் பாதுகாப்போடு வாழமுடியாத நிலை உருவாகின்றன. அவளுடைய எதிர் கால வாழ்க்கை கேள்விக் குறியாக மாறுகின்றன. இப்படிப்பட்ட மனப்போரட்டத்தி லும் மனவேதனைகளையும், 'காமனை அறிந்த ஈசன்' என்ற குறு நாவலின் வழியாக கைம் பெண்ணின் நிலையினை உணர்த்தியுள்ளார்.

*தாலி போனவளை வேலியில்லாத நிலமாக*

*நினைப்பார்களோ எருமை மாட்டுப் பயல்கள் அப்படியென்றால் அமங்கலி என்பது ஒரு வேடந்தானோ? அப்படித்தான் நினைக்கிறார் களா?... உரிமையாளன் போய்விட்டால், எவனும் உரிமையாளன் போல் பார்ப்பானோ? கண்ணகி நீ கொஞ்ச நாளாவது புருஷன் செத்தபிறகு உயிரோடு இருந்திருக்கனுமடி... அப்போதான் உன்னை கற்புத்தெய்வமுன்னு கதறிய சமூகம் உன்னை எப்படிப் பார்த்திருக் கும் என்பது புரிந்திருக்கும்"* (காமனை அறிந்த ஈசன் ப.170)

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பெண்களின் அவளநிலை அவர்களின் எதிர்கால வாழ்க்கை நிலை, குடும்பச்சூழல் ஆகியவைகளைச் சுட்டிக்காட்டும் வகையில் 'காமனை அறிந்த ஈசன்' என்ற குறுநாவல் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

**உறவுகளால் ஏமாற்றப்பட்டவள்**

வாழ்ந்த குடும்பம் கெட்டால் என்ன ஆகும் என்பதற்குச் சாட்சியாக மலேசியா நாட்டில் கோலாலம்பூரில் ஜவுளிக்கடையில் வியாபாரம் செய்து சொந்த ஊரில் தனக்கென ஒரு வீடு, சொத்து எனத் தன் உடன்பிறந்த அண்ணன் மூலம் வாங்கி வைக்கின்றனர். கணவர் திடீர் மரணம் ஆகவே தொழில்முடங்கி சொந்த ஊர் திரும்புகின்றனர். ஆனால் தான் வாங்கிய அனைத்துச் சொத்துக்களும் தனக்கே உரியது என ஏமாற்றப்படுகிறாள். இதனை 'நிழல் முகங்கள்' என்ற புதினத்தின் வாயிலாக ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

"இந்தா பாரு பூவம்மா... எப்போ நீ சட்டம் பேசத் துவங்கினியோ அப்பவே நானும் சட்டம் பேசியாகனும்... ஒன் புருஷன் வெளிநாட்ல சிக்கல் வருமுன்னு தான் ஒங்களோட நன்மைக்காக கோணச்சத்திர வீட்டையும், முடித்தீர்த்தான் குற்றாளப் பேரிடை சத்திரப்பட்டை நிலத்தையும் என் பெயருக்கே வாங்கிப் போட்டேன்."

*"அடக்கடவுளே... சரி... இப்போதாவது என் பெயருக்கு எழுதிக்கொடு அண்ணாச்சி"*

*அதுதான் நடக்காது. ஒன் தம்பிகிட்டே பத்து நகையை இயந்துட்டே... பங்காளிங்ககிட்டே ஆயிரக்கணக்குல ரூபாயை இழந்துட்டே... இந்தச் சொத்தையும் ஒன் பேருக்கு எழுதி வச்சால் அவ்வளவுதான்... ஒரு வருஷத்துல எல்லாச் சொத்தையும் இழந்திடுவே அதனால சொத்தெல்லாம் என் பேருக்கே இருக்கும்*

(நிழல் முகங்கள், ப.73)

தன்னுடைய தங்கை என்றும் பாராமல், சொத்துக்களை ஏமாற்றி அவள் குடும்பத்தை அவமானப்படுத்தும் இழிவான நிலையினை இப்புதினம் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

**அலுவலகப் பெண்ணின் கடமை**

கடமையில் இருந்து தவறாமல் எப்படிப்பட்ட சூழலிலும் தன்னுடைய நேர்மையே முழு மூச்சாய் வாழ்பவள் சந்திரா. தன்னுடைய உறவுகளால் தந்தை கொலை செய்யப் படுகிறார். தன்னுடைய தாய் வீட்டுக்குடும்பம் கடைநிலைக்குத் தள்ளப்படுகின்றன. கணவன் காவல் துறையினரால் கைது செய்யப்படும் சூழல், இந்நிலையிலும் எவருக்கும் சிபாரிசு செய்யாமல் நேர்மையாகப் பணியாற்றும் பாத்திரமாக 'அவளுக்கா' என்ற புதினம் சுட்டிக்காட்டுகின்றன.

*கடைசியாய் ஒண்ணு சந்திரா... நீ எனக்காக ஒன் நேர்மையை விட்டுக்கொடுக்க மாட்டே... எனக்குத் தெரியும் ஆனாலும் உஷார் படுத்துறேன். இப்போ எங்க கம்பெனி பைல் ஒன் கிட்டே இருக்குதாம்... நீ சிபாரிசு செய்தால் நான் தப்பிக்கலாம். என்னோட சில காலம் வாழ்ந்ததை எண்ணி நீ சிபாரிசு செய்திடப்படாது. இதுதான் என்னோட கடைசி வேண்டுகோள். ஒரு பெண் லஞ்சம் வாங்கிறதோ ஆபிஸ் அதிகாரத்தைத் தப்பாய் பயன்படுத்துறதோ...கற்பழிக்கறது மாதிரின்னு, நீ என் கிட்டே முன்னால சொன்னதை இப்போ ஞாபகப்படுத்துறேன்*

(அவளுக்காக. ப. 120)

ஒரு மனிதனுக்குக் கடமையும் கற்பும் ஒன்றுதான் என நாம் உணரமுடிகின்றன.

**தாய் - மகன் பாசப் போராட்டம்**

கணவன் மனைவி ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்தும் ஒரு குடும்பத்தில் மனைவிக்குத் தொழுநோய் அறிகுறி தென்பட்டவுடன் அவளை குடும்பத்தை விட்டே விலக்கி அனுப்பும் ஆணாதிக்கம். அவளிடம் இருந்து

குழந்தையைப் பிரிக்கின்றனர். இதனால் தான் பெற்ற பிள்ளையைப் பார்க்கத்துடிக்கும் தாயின் பாசப்பிணைப்பினை ‘இல்லந்தோறும் இதயங்கள்’ என்ற நாவல் மூலம் மணிமேகலை என்ற பாத்தரத்தின் மூலம் ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

*“என் பையன் எங்கே? மிஸ்டர் ஜெயராஜ், என் பையன் எங்கே?”*

ஜெயராஜ் ஒரேயடியாக அதிர்ந்து போனன். மிஸ்டரா? தாலி கட்டிய மனைவி பேசுற வார்த்தையா? சுடச்சுடபதில் கொடுக்க வேண்டாமா?

*“என் பையன் எங்க இருந்தால் ஒனக்கென்ன?”*

*“ஒங்க பையன்தான். எங்கேயும் இருக்கட்டும். ஆனால் எங்கே இருக்கிறான் என்கிறதைத் தெரிஞ்சுக்க எனக்கு உரிமை உண்டு”* (இல்லந்தோறும் இதயங்கள், ப. 215)

உரிமையும் பாசமும் இரட்டித்த போராட்டமாகக் கணவனிடம் கேட்கும் நிலையினை ஆசிரியர் கூறுவனவாகும்.

எச்.ஐ.வி கிருமியால் பாதிக்கப்பட்ட தன் மகனை ஊர் மக்கள் ஒருவரும் சேர்க்க வில்லை. ஆனால் தாயின் அன்பிற்கு முன் அனைத்தும் சாதாரணமாகும் என்பதை நிரூபிக்கும் வகையில் மகனைத் தன்னுடன் அரவணைக்கும் பாங்கினை.

*“என் செல்வமே... மேல்லோகத்தில் போய் இருடா...! அங்கிருந்து எங்கேயேயும் போயிடதடா... இந்த அம்மா... சீக்கிரமா வந்துடுறேன்டா... அய்யோ... என் எஞ்ஜினிரு மவனே.... நான் செத்து நீ இருக்கப் படாதா...?”* (பாலைப்புறா., ப 347)

நான் இறந்தாலும் தன் மகன் இந்த பூமியில் வாழவேண்டும் என்ற தூய்மையான அன்புள்ளம் கொண்டவளே தாய் என "பாலைப்புறா" புதினம் மூலம் ஆசிரியர் புனைந்துள்ளார்.

**கைம்பெண்**

ஒரு பெண் குழந்தைகளுடன் வாழ்கின்ற போது எதிர்பாராதவிதமாகக் கணவனை இழந்தால் அந்த குடும்பத்தின் நிலையினை ‘ஊருக்குள் ஒரு புரட்சி’ என்ற பதினம் வாயிலாக நைனாரம்மா என்ற பாத்திரத்தின் வாயிலாகக் கூறப்படுவை.

*இந்த நைனாரம்மா ஒரு மகளை கரையேத்தனும் மூணு பையங்களை வளர்க்கனும். இந்த மூக்கையா பொண்டாட்டி நிறை மாத கர்ப்பிணி. இவள் காலத்துக்கும் கண் கலங்கப்படாது. நயினாரும் மூக்கை யாவும் சின்னத்துரை எசமான் வீட்டில் வருசகணக்கில மாடா உழைச்சவங்க.*

(ஊருக்குள் ஒரு புரட்சி. ப, 710)

ஒருகுடும்பத்தலைவியாக இருந்து தன்னுடைய குழந்தைகளை எவ்வாறு பொறுப்புள்ள குடி மக்களாக மாற்றுவது அவர்களுக்கு எதிர் காலத்தில் கல்வி, திருமணம் என பல்வேறு நிகழ்வுகளை எவ்வாறு செய்து முடிப்பது என சிந்திக்கும் பெண்ணாகக் காண முடிகின்றது.

**பாலியல் செயல்கள்**

பெண்கள் தன்னுடைய குடும்பச் சூழலாலும், புரியாத வயதில் செய்கின்ற தவறுகளாலும் பாலியல் செயலில் தொடர்ந்து ஈடுபடுகின்ற னர். சிறுவயதில் ஏற்பட்ட மன அழுத்தம், பெற்றோர்களின் அணுகுமுறை, பொருளாதாரச் சூழல் இவையாவும் பாலியலில் பெண்கள் தொடர்ந்து ஈடுபடக் காரணமாக அமைகின்றன. பாலைப்புறா புதினத்தில் எஸ்தர் என்ற பாத்திரம் சிறுவயதில் பெற்றோர்களின் அரவணைப்பில் ஏற்பட்ட மனஅழுத்தமே காரணமாக அமைகின்றன என்பதை நம்மால் காணமுடிகின்றன. இதனை,

*யானைக்கிட்ட போன கரும்பும், போலீஸ் கிட்ட போன பொருளும் திரும்பாது என்கிறது... தெரியாதவன், ‘சார்’ என்று மன்றாடினாள். அப்படியும் லத்திக் கம்புகள் மீண்டும் ஓங்கப்பட்டபோது எஸ்தர் ஒருத்தரின் கையைப் பற்றிக்கொண்டு பெருவிரலை அழுத்தியபடியே சிரித்தாள். சிரிப்பை கவசமாக்கி கண்களில் கிறக்கம் ஏற்றிப் பார்த்தாள் அந்த போலீஸ்சாரை கண்களால் கைது செய்து லத்தி கம்புகளைக் கீழே போடவைத்தாள்... அவர்களோ அப்போதே இரவு வரக் கூடாதா என்று ஏங்கி ஏங்கி மனோகர் மேல் போட்ட பிடியை விட்டார்கள். அந்தப் பிடியை எஸ்தர் மேல் அழுத்தம்*

*குறைந்துக் கோபம் தணித்துப் போட்டார்கள். பிறகு பகலாய் இருந்தாலும் பரவாயில்லை என்பதுபோல் அவளை இழுத்துக்கொண்டு பின் பக்கமாய்ப் போனார்கள்*

(பாலைப்புறா. ப, 250)

இவ்வாறு பெண்களின் நிலை சூழ்நிலையால் கட்டுண்டு மேலும் மேலும் தொடர்ந்து செய்வதற்குக் காரணமாகின்றன.

## முடிவுரை

பெண்களின் நிகழ்காலச் சிக்கல்கள் அவர்கள் சமுதாயத்தினாலும் தன் குடும்பத்தினாலும் படும் துன்பங்கள், எதிர்காலத்தில் வரும் பிரச்சனைகள் போன்றவைகளைப் புதினம் மூலம் காட்டியுள்ளார்.

பெண்களின் சுயசிந்தனைகளை ஒடுக்குவ தாகவும் அவர்களின் சுதந்திரம் வெற்றுப் பேச்சாகவும் அவர்களுக்கெனத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காமல் அவர்களை ஆணாதிக்கத்தினால் கட்டுப் படுத்துவனாவாக அமைகின்றன.

பெண்களின் உள்ளார்ந்த கருத்துகளுக்கும் சீர்திருத்தச் செயல்களுக்கும் தடைக்கற்களாய் உள்ளவனவற்றை தன்னுடைய சீரிய சிந்தனை யாலும் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளை முன்னறிவிப்பாகப் புதினம் மூலம் சமுதாயத் திற்கு எடுத்துக்காட்டியுள்ளதை அறிய முடிகின்றன. இன்றைய சமுதாயத்தில் பெண்களின் வாழ்வும் அவர்களின் உள்ளம் சார்ந்த தேவைகள், குடும்பச்சூழல், அன்றாட வாழ்வில் எதிர் கொள்ளும் பிரச்சனைகள், வாழ்நாளில் இறுதிவரை போராடும் போராட்ட நிலையினை அவர்படைத்த புதினங்கள் வாயிலாகக் காண முடிகின்றன.

## சான்றெண் விளக்கம்

1. மகாகவி பாரதியார் -பெண்கள் விடுதலைக்கும்மி.
2. பாலைப்புறா, ப. 305.
3. இல்லந்தோறும் இதயங்கள், பக். 200-201.
4. ஒரு கோட்டுக்கு வெளியே, பக். 191, 192.
5. நெருப்புத்தடயங்கள், ப. 293.
6. வெளிச்சத்தை நோக்கி, பக். 42, 43.
7. வளர்ப்பு மகள், ப. 78.
8. சோற்றுப்பட்டாளம், ப. 112.
9. காமனை அறிந்த ஈசன், ப. 170.
10. நிழல் முகங்கள்.
11. பாலைப்புறா, ப. 347.
12. ஊருக்குள் ஒரு புரட்சி, ப. 170.

## துணைநின்ற நூல்கள்

1. சு.சமுத்திரம், பாலைப்புறா, ஏகலைவன் பதிப்பகம், 9, இரண்டாவது குறுக்குத்தெரு, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், சென்னை - 600 041.
2. சு.சமுத்திரம், இல்லந்தோறும் இதயங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், மு.ப.1982.
3. சு.சமுத்திரம், ஒரு கோட்டுக்கு வெளியே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இ.ப. 1992.
4. சு.சமுத்திரம், நெருப்புத் தடயங்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், மு.ப. 1985.
5. சு.சமுத்திரம், வெளிச்சத்தை நோக்கி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், மு.ப. 1987.
6. சு.சமுத்திரம், வளர்ப்புமகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ஐ.ப.1989.
7. சு.சமுத்திரம், சோற்றுப்பட்டாளம், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாலு தெரு, தியாகராய நகர், சென்னை 600 017.
8. சு.சமுத்திரம், காமனை அறிந்த ஈசன், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளலு தெரு, தியாகராய நகர், சென்னை, மு.ப.1997.
9. சு.சமுத்திரம், நிழல் முகங்கள், ஏகலைவன் பதிப்பகம், சென்னை, இ.ப.2000.
10. சு. சமுத்திரம், ஊருக்குள் ஒரு புரட்சி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், நா.ப. 1983.
11. மகாகவி பாரதியார், பெண்கள் விடுதலைக்கும்மி.